ஓம் சரவணஜோதியே நமோ நம

நிகழும் மங்களகரமான விசுவாவசு ஆண்டு ஆடி மாதம் பௌர்ணமி பூஜையின் ஆசி விளக்கமாக ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து ஓங்காரக்குடிலுக்கும், குடிலின் உயர் தொண்டர்கட்கும், குடில் அன்னதானத்திற்கும் பொது அறிவுரை ஆசி விளக்கம்

**ஆசான் அரங்கமகா ஞானியரின் முழுமதி அருளாசி நூல்**

09.08.2025

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி அரங்கன் யான் அருளாசி
வரமென விசுவாவசு ஆண்டு
ஆடி திங்கள் பௌர்ணமி நன்னாளில்

2. இனிதே ஓங்காரக்குடிலின் தர்மத்திற்கும்
உயர் தொண்டர் பெருமக்களின் தொண்டிற்கும்
குடிலின் அன்னதான மாபெரும் சேவைக்கும்
குடிலை நோக்கி வருகின்ற உலக பொதுமக்கட்கும்

3. அரங்கன் யான் பொது அறிவுரை ஆசி
விளக்கம்தனை அருள்வேன்
அருளவே ஓங்காரக்குடில்
உலக சேமத்திற்காக படைக்கப்பட்டதாகும்

4. ஓங்காரக்குடிலின் பூஜைகளும்
ஓங்காரக்குடிலின் சேவைகளும்
அன்னதான நெறிமுறைகளும்
உலகோரை மாற்றும் மகாசக்தியாகவே

5. ஆறுமுகப் பெருமான் அருளாலே
ஆறுமுகப் பெருமானின் சூட்சும ஆற்றலாலே
மகத்துவம் கூடி இருக்க
ஓங்காரக்குடில் நோக்கி இந்தவித

6. விசேட காலங்களில் வரும் அன்பர்கட்கெல்லாம்
அளவிலா வண்ணம் மகான்களுடைய ஆசியும்
அரங்கன் எந்தனுடைய பாதுகாப்பும்
ஆறுமுகப் பெருமானின் மகாசக்தியும் கிட்டி

7. வருவோரெல்லாம் பாதுகாப்பும் சிறப்பும்
ஞானவான்கள் ஆகின்ற வண்ணம்
வல்லமையும் மேன்மையும் கண்டு
சிறக்க நேரும் அவ்வாறே இந்தவித

8. விசுவாவசு ஆண்டு ஆடி மாத
பௌர்ணமி பூஜையில்
முதல் நாள் தொட்டு இன்றைய தினமும்
அரங்க மகான் யானும்

9. ஜோதி கலந்தும் குடிலின்
அருளமுதில் கலந்தும்
ஆற்றலாக ஆக்கம் தந்து வரும்
உலக மக்களையெல்லாம் ஆசி தந்து

10. காத்து நின்றேன் உள்ளபடி
இந்தவித நன்னாளில்
உயர்வாக ஓங்காரக்குடிலின்
தர்மத்துக்கு பொருளுதவி செய்து வந்தவர்கட்கும்

11. ஓங்காரக்குடில் நல்கி வரம் வேண்டியவர்கட்கும்
ஓங்காரக்குடிலின் அறப்பணிகளில் உதவி நின்றவர்கட்கும்
அரங்கன் யான் பரிபூரண
ஆசியும் பாதுகாப்பும் தந்துள்ளேன்

12. உள்ளபடி வந்த அன்பர்களின்
நோக்கங்கள் அத்துணையும் வெற்றி கொள்ள
அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு
ஓங்காரக்குடிலின் நிர்வாகம் அரங்கன் என்

13. தயவோடு சிறப்பாய் நடந்து வர
நிர்வாகத்தில் எவ்வித பிழையும்
குறுக்கீடும் வாராத வண்ணம்
சர்வ பாதுகாப்பு கூட்டி அருள்புரிவேன்

14. ஓங்காரக்குடிலின் அன்னதான சேவைக்கு
ஒருபோதும் இடையூறு தடை வாராத வண்ணம்
பெரும்பாதுகாப்பிட்டு அதற்குண்டான
அன்னதான தேவைகட்கு மேலான வண்ணம்

15. பொருளாதார உதவியும் தந்தருள் புரிவேன்
உயர் மக்களையும் செல்வ சீமான்களையும்
ஓங்காரக்குடிலின் தொடர்பை கூட்டி இனிதே
தர்மங்கள் தடைபடா வண்ணம் வளரவும்

16. சிறந்தோங்கவும் அரங்கன் யான் அருள்புரிவேன்
இதனொடு உயர் தொண்டாற்றி

வருகின்ற தொண்டர்கட்கும் நிர்வாகிகட்கும்
குடிலின் செயல்பாடுகளில் உள்வெளிப் பணியென

17. உள்ளிருந்தும் வெளியிருந்தும்
சேவை வழி மனதாலும் உடல் உழைப்பாலும்
தொண்டுகள் செய்து வருகின்ற
அன்பர் பெருமக்கட்கும்

18. ஓங்காரக்குடில் நோக்கி வரமுடியாமல் தவிப்பில்
அவரவர் இல்லிலே பூஜை புரிபவர்கட்கும்
அரங்கன் யான் இந்தவித நன்னாளில்
சூட்சுமமாய் அவர்களுடைய வழிபாட்டுக்கும் பூஜைக்கும்

19. தொண்டுக்கும் மனமிரங்கி அருள் புரிந்துள்ளேன்
உள்ளபடி அரங்கன் என் ஆசியாலே
உயர்வுபட வரும் அன்பர்கள் அத்துணைபேருமே
மேன்மைபல கூடி அவர்கள் வேண்டிய வண்ணம்

20. அருள் பொருள் வளமோடு ஆயுள்பலம் கண்டு
இனி பிறவாத பெரும்பேறுக்கான பரிபூரண ஆசி உண்டு
மேலும் குடிலின் செயல்பாடுகளும்
தர்மத்தினுடைய விரிவாக்கமும்

21. மேலும் விரிந்தோங்க இருக்க
அன்பர் பெருமக்களெல்லாம்
ஆதரவு கூட்டி வந்து
இயன்ற வண்ணம் பொருளுதவி செய்து

22. புண்ணிய பலம் பெருக்கிக் கொள்ள
அவர்களெல்லாம் அரங்கன் என் ஆசியாலே
தர்மவான்களாகவும் ஞானவான்களாகவும்
இனி பிறவாத பெரும்பேறு கண்டு

23. சிறக்க பரிபூரண ஆசி
ஆசி தந்தேன் இவை நன்னாளில்
அரங்கன் என்னோடு ஞானியர் பெருமக்களும்
மகா சக்திகளும் அகத்தியர் முதலான அனைத்து

24. சித்தர் பெருங்கூட்டங்களும்
இதனொடு எம்பெருமானும்
மகா சக்தியும் இறங்கி அருள்புரிந்துள்ளனர்
அன்னதனால் ஒவ்வொரு முறையான

25. முழுமதி பூஜையும் இன்னும் சக்திகூடி
வல்லமைபட இந்த பூஜையின் மகத்துவம்
உலகே அறியப்படும் உலகமெங்கும்
ஞானிகள் பூஜையாக ஒவ்வொரு முழுமதியும்

26. சக்தி கூடி இனிதே உலகமெங்கும்
ஞானியர்களுடைய காலமும் ஞானசித்தர்கள் காலமுமாக
ஞானிகளுடைய ஆட்சி காலமுமாக மாற்றம் பெறக்கூடும்
அரங்கமகான் யான் அருளிய பொது அறிவுரை ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி